சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

சக்கர வியூகம்
தினசரி புலனாய்வு நாளிதழ்
SAKKRA VIYUGAM

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 187 | 31.12.2025 | WEDNESDAY | MARGAZHI : 16 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 187 | 31.12.2025 | புதன்கிழமை | மார்கழி : 16 | விலை : ரூ.5/– |

3 புதின் வீடு மீது ட்ரோன் தாக்குதல்? ட்ரம்ப் கோபம்; ஜெலன்ஸ்கி விளக்கம்!

4 திருத்தணியில் வட மாநில இளைஞர் மீதான தாக்குதலும் நடவடிக்கைகளும் தமிழக அரசு கூறுவது என்ன?..

2 2026-27ம் ஆண்டு பட்ஜெட்; பிரதமருடன் நிர்மலா சீதாராமன், பொருளாதார நிபுணர்கள் ஆலோசனை

## உள்நோக்கத்துடன் குண்டர் சட்டத்தை பயன்படுத்திய

# “போலீசார் மீது நடவடிக்கை”

## சென்னை ஐகோர்ட் அதிரடி

சென்னை: டிச.31-

''உள்நோக்கத்துடன் குண்டர் சட்டத்தை பயன்படுத்தும் போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.



பணம் கேட்டு மிரட்டல் மற்றும் நில அபகரிப்பு புகாரின் கீழ் வாராகி என்ற யுடியூபரை போலீசார் கைது செய்தனர்.பிறகு அவர், சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவுப்படி குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார். இதனை எதிர்த்து, வாராகியின் மனைவி நீலிமா சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இதனை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம் மற்றும் தனபால் அமர்வு, குண்டர் சட்டத்தை கண்மூடித்தனமாக பயன்படுத்தக்கூடாது. உள்நோக்கத்துடன் குண்டர் சட்டத்தை பயன்படுத்திய போலீசார் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறியதுடன் வாராகிக்கு 3 மாதம் இடைக்கால ஜாமின் வழங்கியதுடன், அவரது மனைவி தொடர்ந்த மனு குறித்து 12 வாரங்களுக்குள் பதிலளிக்க போலீசாருக்கு உத்தரவிட்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், சாலை பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்து, மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக், மாநகர துணை காவல் ஆணையர் பிரவீன் கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், மாவட்ட வன அலுவலர் ராஜேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மகாராஜ், களால் உதவி ஆணையர் செல்வி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## விளையாட்டு வீரர்கள் அரசு பணியில் சேரும் நிலை உருவாகியுள்ளது : அனுமந்தராயன்கோட்டை பரிசளிப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

சின்னாளபட்டி, டிச.31

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட அனுமந்தராயன்கோட்டையைச் சேர்ந்த லொயோலா கால்பந்து குழு, ஊர் பொதுமக்கள் சார்பில் மாநில அளவிலான 9வது மின்னொளி ஐவர் கால்பந்து போட்டி அனுமந்தராயன்கோட்டையில் உள்ள இனிகோ மைதானத்தில் நடைபெற்றது. கடந்த 26ந்தேதி போட்டிகள் தொடங்கியது. 14, மற்றும் 17 வயதுக்குட்பட்ட பிரிவுகளுக்கான போட்டியில் ஆண்கள் பிரிவில் 44 அணிகளும், பெண்கள் பிரிவில் 4 அணிகளும், சிறுவர்கள் பிரிவில் 16 அணிகளும் பங்கேற்று விளையாடினார்கள். 14 வயதுகுட்பட்டோருக்கான பிரிவில் திண்டுக்கல் கேலோ இந்தியாஅணி வெற்றிபெற்று சாம்பியன் கோப்பை தட்டிசென்றது. பொள்ளாச்சி எம்.எப்.சி. 2வது இடம் பிடித்தது. பெண்களுக்கான இறுதிப்போட்டியில் சின்னாளபட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளி அணி சாம்பியன் பட்டம்





வெற்றிபெற்றது. அதைத்தொடர்ந்து நடந்த ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் காரைக்குடி மற்றும் நாகர்கோவில் அணிகள் மோதின. இதில் 62என்ற கோல் கணக்கில் காரைக்குடி அணியை நாகர்கோவில் அணி வெற்றிபெற்று சாம்பியன் கோப்பையை தட்டிச் சென்றது. காரைக்குடி அணி 2வது இடமும், அனுமந்தராயன்கோட்டை லயோலா எப்.சி. அணி 3வது இடமும் பிடித்தன. பின்னர் பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு லொயலா கால்பந்தாட்டக் குழு தலைவர் ஸ்டாலின் தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் எம்.இன்பராஜ், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் என்ற மணி சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் மேலப்பட்டி சூசைராஜ், வழக்கறிஞர் அணி துணைஒ அமைப்பாளர் ஆல்வின் ஜெகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோனூர் தங்கப்பாண்டியன், ஒன்றிய முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் ராஜாமணி, கரிசல்பட்டி ஜோசப் ஆசான், கரிசல்பட்டி கிளைச்செயலாளர் ஜஸ்டின் திரவியம், ஒன்றிய அமைப்புசாரா ஓட்டுநர் அணியைச் சேர்ந்த ஜான்பால் உட்பட திமுகவினர் மற்றும் ஊர் பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





## வைகுண்ட ஏகாதசியை மேட்டுப்பட்டி ஸ்ரீவெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு

சின்னாளபட்டி, டிச.31

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி மேட்டுப்பட்டி பகுதியில் அமைந்துள்ளது. அருள்மிகு ஸ்ரீவெங்கடேச பெருமாள் திருக்கோவில் தேவாங்கர் செட்டியார் சமுதாயத்தில் லத்தியார் வம்சத்திற்கு பாத்தியப்பட்ட இக்கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, சொர்க்கவாசல் திறப்பது வழக்கம். சொர்க்கவாசல் வழியாக பெருமாள் வரும்போது, கோவில் கமிட்டியார்கள் மற்றும் பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என்ற கோஷத்துடன் பெருமாளை தரிசனம் செய்தனர்.

கருட வாகனத்தில் மேட்டுப்பட்டி பகுதியில் உலா வந்த வெங்கடேசபெருமாள் பக்தர்களுக்கு அருள்பாளித்தார். மூலவரான வெங்கடேசபெருமாளுக்கு சிறப்பு தங்க கவசம் அணிவித்திருந்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் கமிட்டியைச் சேர்ந்த கௌரக ஆலோசகர்கள் பரந்தாமன், கோவிந்தராஜ், தலைவர் ஹிந்தி பண்டிட் சுப்ரமணி, செயலாளர் பலராமன், பொருளாளர் கவுன்சிலர் சுப்பிரமணி, நிர்வாக கமிட்டியைச் சேர்ந்த பார்த்தசாரதி, மகேந்திரன், வடிவேல், கேசவன், குமரேசன், தலைமையிலான விழாக் கமிட்டியார்கள் சிறப்பாக செய்திருந்தனர். இதுபோல வைகுண்ட ஏகாதேசியை முன்னிட்டு சின்னாளபட்டி பிரிவு பிருந்தாவன தோப்பில் உள்ள லெட்சுமி நாராயன பெருமாள் விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீராமஅழகர் தேவஸ்தான கமிட்டியைச் சேர்ந்த பரம்பரை மேனேஜர் ராஜேஷ், தலைவர் எஸ்.வி.சண்முகம், செயலாளர் சுப்பையா, பொருளாளர் லேத்முருகன், தலைமையிலான கோவில் கமிட்டியார்கள் சிறப்பாக செய்திருந்தனர். சுவாமிக்கான அலங்காரத்தை கோவில் தலைமை குருக்கள் ஜெகநாதன் தலைமையிலான பட்டாச்சாரியார்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், சக்கிமங்கலம் ஊராட்சியில் உள்ள சமத்துவபுரம் நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களின் தரம் குறித்து மற்றும் இருப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

## ஒட்டன்சத்திரம் வனச்சரகத்தில் மனித விலங்கு மோதல் தடுப்பு விழிப்புணர்வு சிறப்பு முகாம்

ஒட்டன்சத்திரம் டிச.31

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வனச்சரகத்திற்குட்பட்ட சிந்தலவாடம்பட்டி ஊராட்சி, இராமபட்டினம்புதூரில் மனித ஙீவிலங்கு மோதல்களைத் தணிக்கும் நோக்கத்துடனும், விவசாயிகள் நலன் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் ஒட்டன்சத்திரம் வனச்சரக அலுவலர் ராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த முகாமில் வனப்பகுதிகளை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் அடிக்கடி ஏற்படும் காட்டு விலங்குகளின் நுழைவு, அதனால் ஏற்படும் பயிர் சேதம், மனிதர்களுக்கு நேரிடும் ஆபத்துகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

மேலும், மனித விலங்கு மோதல்களைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பாதுகாப்பு முறைகள், வன விலங்குகள் குடியிருப்பு பகுதிகளுக்குள்



நுழையும் போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து வனத்துறை அலுவலர்கள் தெளிவாக எடுத்துரைத்தனர். குறிப்பாக இரவு நேரங்களில் தனியாக வனப்பகுதிகளுக்குள் செல்லாமல் இருப்பது, பயிர் நிலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல், விலங்குகள் தென்பட்டால் உடனடியாக வனத்துறைக்கு தகவல் அளித்தல் போன்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன.

விவசாயிகளின் பயிர் சேதம் தொடர்பான இழப்பீடு பெறும் நடைமுறைகள், அரசின் உதவித் திட்டங்கள் குறித்த தகவல்களும் முகாமில் விளக்கப்பட்டன. இதனால் விவசாயிகள் பயனடைந்ததாகவும், இத்தகைய விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

முகாமின் இறுதியில், மனிதர்களும் வனவிலங்குகளும் பாதுகாப்புடன் இணைந்து வாழ்வதற்கான ஒத்துழைப்பு அவசியம் என வலியுறுத்தப்பட்டு, வனத்துறையுடன் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வனச்சரகம் சார்பாக கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் இம்முகாமில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பன்னீர்செல்வன் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள், ஊராட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளிக்கப்பட்டது. அதில் மலைப்பகுதியில் இருந்து 3 கிலோ மீட்டருக்குள் இருக்கும் விவசாயிகளுக்கு சோலார் மின் வேலி அமைப்பதற்கு100% மானியம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மேலும் இந்த முகாமில் விவசாய சங்கம் சார்பாக தலைவர் பெரியசாமி செயலாளர் சுப்பிரமணி ஒன்றிய குழு உறுப்பினர் பழனிச்சாமி விவசாயிகள் சார்பாக பாலசுப்பிரமணி, மாரிமுத்து, அழகர்சாமி, ஜெயபிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## புதுச்சேரியில் தடை செய்யப்பட்ட மருந்தகங்களில் தொடர் விற்பனை: அதிமுக போராட்டம்

புதுச்சேரி, டிச.31- போலி மருந்துகள் கண்டறியப்பட்டு விற்பனைக்கு தடை விதிக்கப்பட்ட 3 மருந்தகங்களில் தொடர்ந்து மருந்து விற்றதால், கடைகளின் ஷட்டரை மூடியும் மருந்துகளை சாலையில் கொட்டியும் அதிமுகவினர் போராட்டம் நடத்தினர்.

புதுச்சேரி புஸ்சி வீதியில் அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் தலைமையில் அதிமுகவினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு மூன்று மருந்தகங்களில் போலி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறி மருந்தகங்களின் ஷட்டர் கதவை இழுத்து மூடினர் அங்கிருந்த மாத்திரைகளை சாலையில் கொட்டி கண்டன கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து அப்பகுதியில் செயல்படும் பல்வேறு மருந்தகங்களுக்கும் சென்று போலி மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது. மக்களின் உயிருடன் விளையாடக் கூடாது என அறிவுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில அதிமுக செயலாளர் அன்பழகன் கூறியதாவது: புதுச்சேரியில் போலி மருந்து தயாரித்தல், போலி மருந்து விற்பனை சம்பந்தமாக காவல்துறை நடவடிக்கை, சிபிஐ விசாரணை என கடந்த ஒரு மாத காலமாக புதுச்சேரி மாநிலத்தை போலி மருந்து விவகாரம் ஆக்கிரமித்து உள்ளது. மருந்து கட்டுப்பாட்டு துறையின் அதிகாரிகள் பல சில்லறை மருந்து கடைகளில் ஒரு சில மருந்துகளை பரிசோதனைக்காக அனுப்பி உள்ளதாக தெரிகிறது.அதில் புஸ்சி வீதியில் செயல்படும் 3 மருந்து கடைகளில் (செம்பருத்தி, ஸ்ரீ குகா) போலி மருந்துகள் கண்டறியப்பட்டு மருந்து விற்பனை முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதாக மருந்து கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது. மருந்து கட்டுப்பாட்டு வாரியம் குறிப்பிட்டு இருந்த அந்த மூன்று மருந்து கடைகளிலும், மருந்து விற்பனை செய்யப்படுவதாக மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

அதன் அடிப்படையில் அங்கு நான் சென்று பார்க்கும் பொழுது மேற்கூறிய கடைகளில் மருந்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. மருந்து கட்டுப்பாட்டு வாரியம் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகும் ஏன் கடை திறந்து வைத்திருக்கிறீர்கள் என கேட்டு மேற்கூறிய கடைகளை மூடும்படி வலியுறுத்தினோம்.புஸ்சி வீதியில் உள்ள மருந்து கடைகளில் போலி மருந்துகளை தயவு செய்து யாரும் விற்பனை செய்யாதீர்கள் என்றோம். போலி மருந்தால் மக்கள் பீதியில் உள்ளனர். துறை அதிகாரிகளுடன் ஒரு வெள்ளை அறிக்கையை சுகாதாரத்துறை வகிக்கும் முதல்வர் ரங்கசாமி வெளியிட வேண்டும்.'' என்று அன்பழகன் வலியுறுத்தினார்.

## கலீதா ஜியா மறைவு: 3 நாட்கள் துக்கம் அனுசரிப்பு; வங்கதேச அரசு அறிவிப்பு!

டாக்கா, டிச.31- வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமரும், அந்நாட்டின் எதிர்க்கட்சியான வங்கதேச தேசியக் கட்சியின் தலைவருமான கலீதா ஜியா மறைவை அடுத்து, மூன்று நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும் என்று அந்நாட்டின் இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார். கலீதா ஜியாவின் மறைவை அடுத்து முகமது யூனுஸ், தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர், ''இன்று நாட்டுக்கு மிகவும் துயரமான நாள். நாட்டின் ஜனநாயக அரசியலின் முன்னணி ஆளுமையாக விளங்கிய கலீதா ஜியா இன்று நம்மிடம் இல்லை. ஜனநாயகம், பல கட்சி



அரசியல் கலாச்சாரம், மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான போராட்டம் ஆகியவற்றில் அவரது அசாதாரண பங்கு வரலாற்றில் நிலைத்திருக்கும்தேசத்தின் இந்த கடினமான காலத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்த துக்க தருணத்தைப் பயன்படுத்தி யாரும் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கவோ, நாசகாரச் செயல்களில் ஈடுபடவோ அனுமதிக்காதபடி அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நாம் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மூன்று நாட்கள் அரசு துக்கம் அனுசரிக்கப்படும். அவரது இறுதிச் சடங்கு நடைபெறும் தினம் (டிச. 31) பொது விடுமுறை என அறிவிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார். கலீதா ஜியா மறைவு: கலீதா ஜியா (டிச. 30) அதிகாலை காலமானார். நீண்டகாலமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு டாக்காவிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று காலை 6 மணியளவில் உயிரிழந்ததாக அவரது கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்தது.கல்லீரல் பாதிப்பு, நீரிழிவு மற்றும் இதயம் தொடர்பான பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளால் கலீதா ஜியா அவதிப்பட்டு வந்தார். கடந்த நவம்பர் 23ம் தேதி நுரையீரல் தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அவரது உடல்நிலை சீராகவில்லை. கடந்த டிசம்பர் 11ம் தேதி முதல் அவர் தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசக் கருவி உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தார். வெளிநாட்டு மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் அவருக்குத் தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று அவர் உயிரிழந்தார்.

வங்கதேசத்தின் முன்னாள் அதிபர் ஜியாவுர் ரஹ்மானின் மனைவியான கலீதா ஜியா, 1981ல் தனது கணவர் படுகொலை செய்யப்பட்ட பிறகு அரசியலில் நுழைந்தார். 1984ம் ஆண்டு முதல் பிஎன்பி கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்த அவர், 1991 முதல் 1996 வரையிலும், மீண்டும் 2001 முதல் 2006 வரையிலும் வங்கதேசத்தின் பிரதமராக பதவி வகித்தார்.17 ஆண்டுகளாக லண்டனில் வாழ்ந்து வந்த அவரது மூத்த மகன் தாரிக் ரஹ்மான், சில நாட்களுக்கு முன்புதான் வங்கதேசம் திரும்பியிருந்தார். வங்கதேச அரசியலில் ஷேக் ஹசீனாவுக்குப் பெரும் சவாலாகத் திகழ்ந்த கலீதா ஜியாவின் மறைவு அந்நாட்டின் அரசியல் வட்டாரத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



## 2026-27ம் ஆண்டு பட்ஜெட்; பிரதமருடன் நிர்மலா சீதாராமன், பொருளாதார நிபுணர்கள் ஆலோசனை

புதுடில்லி, டிச.31- 2026ம் ஆண்டு பட்ஜெட் குறித்து, டில்லியில் பிரதமர் மோடியுடன் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் பொருளாதார நிபுணர்கள் ஆலோசனை நடத்தினர். மத்திய பட்ஜெட், கடந்த 2017ம் ஆண்டு முதல் பிப்ரவரி 1ல் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. 2026ல், பிப்ரவரி 1ல் ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அதனால், 2026 27ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட், அன்றைய தினம் தாக்கல் செய்யப்படுமா என கேள்வி எழுந்துள்ளது. பொதுவாக, ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்றாலும், பட்ஜெட் தாக்கல் போன்ற மிக முக்கிய நிகழ்வுகளுக்காக பார்லி., கூடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. 2020ல், கொரோனா தொற்று காலத்தின் போது அவசர தேவைகளுக்காக ஞாயிற்றுக்கிழமை பார்லிமென்ட் கூடியது.2026 27ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1ல் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு வீச்சில் நடந்து வருகிறது. இந்த பரபரப்பான சூழலில் இன்று (டிசம்பர் 30) பட்ஜெட் குறித்து, டில்லியில் பிரதமர் மோடியுடன் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் பொருளாதார நிபுணர்கள் ஆலோசனை நடத்தினர். நிதி ஆயோக் துணைத் தலைவர் சுமன் பெரி, நிதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி பி.வி.ஆர்.சுப்ரமணியம் மற்றும் நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினர்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். அப்போது பட்ஜெட்டில் இடம்பெறும் திட்டங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது என டில்லி வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

## டாடாஎர்ணாகுளம் எக்ஸ்பிரஸ் ரயிலில் தீ விபத்து: 2 ஏசி பெட்டிகள் தீயில் கருகி ஒருவர் உயிரிழப்பு

விசாகப்பட்டினம், டிச.31- டாடா எர்ணாகுளம் எக்ஸ்பிரஸ் ரயிலில் நேற்று அதிகாலை சுமார் 1.30 மணிக்கு 2 ஏசி பெட்டிகளில் தீ பிடித்தது. உடனே ரயில் நிறுத்தப்பட்டு பயணிகள் உடனடியாக இறங்கினர். இதற்குள் தீ முழுவதுமாக பரவி 2 ஏசி பெட்டிகளும் தீயில் கருகின. இந்த விபத்தில் விஜயவாடாவைச் சேர்ந்த ஒருவர் தீயில் கருகி உயிரிழந்தார்.



டாடா எர்ணாகுளம் எக்ஸ்பிரஸ் ரயில், ஜார்க்கண்ட் மாநிலம் டாடா நகர் ஜங்ஷனிலிருந்து புறப்பட்டு எர்ணாகுளம் நோக்கி வந்து கொண்டிருந்தது. நேற்று அதிகாலை 1.30 மணிக்கு ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம் எலமஞ்சிலி எனும் இடத்தில் திடீரென அந்த ரயிலின் பி1, எம்2 ஏசி பெட்டிகளில் தீ பிடித்தது.

உடனே ரயில் நிறுத்தப்பட்டது. அப்போது தூங்கி கொண்டிருந்த பயணிகள் அலறி அடித்துக்கொண்டு, தங்களது உடைமைகளை ரயிலிலேயே விட்டுவிட்டு, உயிரை காப்பாற்றிக்கொள்ள வெளியே ஓடினர். இதற்குள் அந்த 2 ஏசி பெட்டிகள் முற்றிலுமாக தீயில் கருகியது.

தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை போராடி அணைத்தனர். பின்னர் அந்த ரயிலை போலீஸார் ஆய்வு செய்தபோது, பி1 பெட்டியில் பி2 இருக்கையில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் உடல் கருகி இறந்து கிடந்தார். அவர் இறக்கும் முன் கடைசியாக தனது மனைவியுடன் செல்போனில் பேசி உள்ளார். அவர் கொண்டு வந்த பையில் ரூ.5.80 லட்சம் பணம் மற்றும் தங்க நகைகள் இருந்தன. இவற்றை அவரின் உறவினர்களை வரவழைத்து ரயில்வே போலீஸார் ஒப்படைத்தனர்.

தீ விபத்தின்போது, அந்த பணப்பையை எடுத்துக் கொண்டு ஓட முடியாத காரணத்தினால், அந்த பை குறித்தும் விபத்து குறித்தும் அவரின் மனைவிக்கு தகவல் கூறிவிட்டு, உயிரோடு எரிந்து தனது உயிரை விட்டுள்ளார். அவரின் பெயர் சந்திரசேகர் சுந்தர் (70), விஜயவாடாவைச் சேர்ந்தவர் என்பது விசாரணையில் தெரியவந்தது. விபத்து குறித்து அனகாபல்லி ரயில்வே போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## கும்பகோணம் தாராசுரம் கோயிலில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தரிசனம்

கும்பகோணம், டிச.31- கும்பகோணம் வட்டம் தாராசுரத்தில் 2ம் ராஜராஜசோழனால் கட்டப்பட்ட, அடிக்கு 1008 சிற்பங்கள் உடைய ஐராவதீஸ்வரர் கோயிலில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அவரது மனைவி சுவாமி தரிசனம் மேற்கொண்டனர். தொல்லியல் துறையினர் கட்டுப்பாட்டில் உள்ள இந்தக் கோயிலில் உள்ள மூலவரை தரிசனம் செய்த அவர்கள் கோயிலைச் சுற்றி உள்ள கலைநயத்துடன் நுணுக்கம் மிகுந்த சிற்பங்களை பார்வையிட்டு அதன் விளக்கத்தை கேட்டறிந்தனர். பின்னர் கோயில் வெளி பிரகாரத்தில் மழைக்காலங்களில் நீர் தேங்கக் கூடிய பகுதியை பார்வையிட்டார். அப்போது தொல்லியல் துறை அதிகாரிகள் மழை நீர் தேங்காதவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து விளக்கம் அளித்தனர். இதையடுத்து சுவாமிமலை சுவாமிநாத கோயிலில் தரிசனம் மேற்கொண்ட அவர் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு புறப்பட்டுச் சென்றார். வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வருகை 2ம் தேதி வரை தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் செல்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உள்நோக்கத்துடன் குண்டர் சட்டத்தை பயன்படுத்திய போலீசார் மீது நடவடிக்கை: சென்னை ஐகோர்ட்

சென்னை, டிச.31- ''உள்நோக்கத்துடன் குண்டர் சட்டத்தை பயன்படுத்தும் போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. பணம் கேட்டு மிரட்டல் மற்றும் நில அபகரிப்பு புகாரின் கீழ் வாராகி என்ற யுடியூபரை போலீசார் கைது செய்தனர்.பிறகு அவர், சென்னை போலீஸ் கமிஷனர் உத்தரவுப்படி குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார். இதனை



எதிர்த்து, வாராகியின் மனைவி நீலிமா சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம் மற்றும் தனபால் அமர்வு, குண்டர் சட்டத்தை கண்மூடித்தனமாக பயன்படுத்தக்கூடாது. உள்நோக்கத்துடன் குண்டர் சட்டத்தை பயன்படுத்திய போலீசார் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறியதுடன் வாராகிக்கு 3 மாதம் இடைக்கால ஜாமின் வழங்கியதுடன், அவரது மனைவி தொடர்ந்த மனு குறித்து 12 வாரங்களுக்குள் பதிலளிக்க போலீசாருக்கு உத்தரவிட்டனர்.

## “பயமும், ஊழலும் மேற்கு வங்கத்தின் அடையாளமாக மாறிவிட்டது” அமித் ஷா

கொல்கத்தா, டிச.31- “மேற்கு வங்கத்தின் வளர்ச்சி நின்றுவிட்டது. மோடி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பல நலத்திட்டங்கள் இங்கே முடக்கப்பட்டுள்ளன. பயமும் ஊழலும் மேற்கு வங்கத்தின் அடையாளமாக மாறிவிட்டன” என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அமித் ஷா, “அடுத்து நடைபெறவுள்ள மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாங்கள் அரசாங்கத்தை அமைப்போம், அதுதான் எங்கள் இலக்கு. 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு, பாஜக மகாராஷ்டிரா, ஹரியானா, டெல்லி மற்றும் இப்போது பிஹாரில் அரசாங்கங்களை அமைத்துள்ளது.

மேற்கு வங்கத்தில் அடுத்த தேர்தல் ஊடுருவல் பிரச்சினையின் அடிப்படையிலேயே நடத்தப்படும். ஊடுருவல் என்பது இனி மேற்கு வங்கத்திற்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல. அது இப்போது



தேசியப் பாதுகாப்புடன் தொடர்புடையது.

அசாம், திரிபுரா, குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் காஷ்மீரில் ஊடுருவல் நின்றுவிட்டது. ஆனால், ஊடுருவல்காரர்களால் மேற்கு வங்கத்தின் மக்கள்தொகை அமைப்பு மாறிவிட்டது. ஊடுருவல்காரர்களால் மேற்கு வங்கமும் அதன் கலாச்சாரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இதில் மேற்கு வங்க அரசுக்கு எந்தப் பொறுப்பும் இல்லையா?. ஊடுருவல்காரர்களுக்கு யார் ஆவணங்களைத் தயாரித்துக் கொடுக்கிறார்கள்? நாட்டின் எந்தப் பகுதியில் பிடிபட்ட ஊடுருவல்காரராக இருந்தாலும், அவர்களது ஆவணங்கள் மேற்கு வங்கத்தில் தயாரிக்கப்பட்டவையாகவே உள்ளன. ஊடுருவல்காரர்களை எந்த விலை கொடுத்தாவது பாதுகாப்பதை திரிணமூல் ஒரு கொள்கையாகவே வைத்துள்ளது” என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், “நாட்டின் முதல் மின் உற்பத்தி நிலையம், முதல் கார் உற்பத்தி ஆலை, முதல் எஃகு ஆலை, நாட்டின் முதல் உயரமான கட்டிடம், முதல் சணல் ஆலை, முதல் மெட்ரோ ரயில் ஆகியவை மேற்கு வங்கத்தில்தான் தொடங்கப்பட்டன. இவற்றில் எதுவும் மம்தாஜியின் ஆட்சியில் நடக்கவில்லை. அவரது ஆட்சிக்காலத்தில் மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் சிண்டிகேட் கட்டுப்பாடு காரணமாக 7,000 நிறுவனங்கள் மேற்கு வங்கத்தை விட்டு வெளியேறிவிட்டன. மேற்கு வங்கம் பொருளாதாரப் பேரழிவின் விளிம்பில் உள்ளது.மம்தா பானர்ஜி அரசாங்கம் ஏன் மத்திய அரசின் திட்டங்களை மாநிலத்தில் அனுமதிக்க மறுக்கிறது. மெட்ரோ ரயில்கள் காற்றில் ஓடவைக்க முடியாது. நிலம் வழங்குவது மாநிலத்தின் பொறுப்பு. தமிழ்நாடு, தெலங்கானா போன்ற எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நிலம் வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. மற்ற மாநிலங்களில் பிரதமர் ஒரு திட்டத்தைத் தொடங்கி வைக்க வரும்போது, எதிர்க்கட்சி முதல்வர்கள் கூட கலந்துகொள்கிறார்கள். இங்கு, மம்தா மேடையைக் கூட பகிர்ந்து கொள்ள மாட்டார். அவர் எதற்காக இவ்வளவு பயப்படுகிறார்?.

மேற்கு வங்கத்தின் வளர்ச்சி நின்றுவிட்டது. மோடி அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பல நலத்திட்டங்கள் இங்கே முடக்கப்பட்டுள்ளன. பயமும் ஊழலும் மேற்கு வங்கத்தின் அடையாளமாக மாறிவிட்டன.

மம்தாவின் அமைச்சர்களில் ஒருவரிடமிருந்து ஏன் 27 கோடி ரூபாய் மீட்கப்பட்டது என்பதற்கு அவர் பதிலளிப்பாரா? மேற்கு வங்கம் போன்ற ஒரு ஏழ்மையான மாநிலத்தில், கோடிக்கணக்கான ரூபாய் திரிணமூல் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களின் வீடுகளில் கண்டெடுக்கப்படுகின்றன. ஆனால் அவர் ஊழலே இல்லை என்று கூறுகிறார்? இந்தக் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க வேண்டும்.மேற்கு வங்கத்தில் பெண்கள் இரவு 7 மணிக்கு மேல் தங்கள் விடுதிகளிலிருந்து வெளியே வர முடியாதா?. நாம் முகலாயர் காலத்தில் வாழ்கிறோமா? பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை வழங்குவது நமது அரசியலமைப்புச் சட்டக் கடமையாகும். ஆர்.ஜி.கர் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கு, துர்காபூர் மற்றும் தெற்கு கொல்கத்தா சட்டக் கல்லூரி பாலியல் வன்கொடுமை வழக்குகளின் குடும்பத்தினரும் இந்த திறமையற்ற அரசாங்கம் பதவி விலகுவதற்காகக் காத்திருக்கிறார்கள்” என்று கூறினார்.




# வங்கதேசத்தில் இந்துக்கள் மீதான தாக்குதலுக்கு இந்திய ஷியா தனிச்சட்ட வாரியம் கடும் கண்டனம்

லக்னோ, டிச.31-

வங்கதேசத்தில் இந்து சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு அனைத்து இந்திய ஷியா தனிச் சட்ட வாரியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அனைத்து இந்திய ஷியா தனிச் சட்ட வாரியத்தின் (ஏஐஎஸ்பிஎல்பி) வருடாந்திர கூட்டம் லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின்னர் ஏஐஎஸ்பிஎல்பி பொதுச் செயலாளர் மவுலானா யசூப் அப்பாஸ் கூறியதாவது: வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டித்தது.மேலும், அப்பாவி மனிதர்கள் யாரையும் கொல்வதை இஸ்லாம் கடுமையாகத் தடுக்கிறது என்றும், மதத்தின் பெயரால் இத்தகைய மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுமேலும் இந்தக் கூட்டத்தில், வக்பு திருத்த சட்டத்தை திரும்பப் பெற வேண்டும், பொது சிவில் சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகிவற்றை அமல்படுத்தும் முடிவை திரும்பப் பெற வேண்டும் என்பன உட்பட 23 அம்ச தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# இந்தோனேசிய முதியோர் இல்ல தீ விபத்தில் 16 பேர் உயிரிழப்பு

மனாடோ டிச.31-

இந்தோனேசியாவில் உள்ள முதியோர் இல்லத்தில் ஞாயிற்றுக் கிழமை மாலை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 16 முதியவர்கள் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.இதுகுறித்து வடக்கு சுலவேசி காவல் துறை செய்தித் தொடர்பாளர் அலாம்சியா ஹசிபுவான் நேற்று கூறியதாவது: இந்தோனேசியாவின் சுலவேசி மாகாணத்தில் உள்ள மனாடோவில் உள்ள முதியோர் இல்லத்தில் ஞாயிற்றுக் கிழமை இரவு தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதில் அங்கு தூங்கிக்கொண்டிருந்த 16 முதியவர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். உயிர்பிழைத்த 15 முதியவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உயிரிழந்த முதியவர்களின் உடல்கள் குடும்பத்தினரின் உதவியுடன் அடையாளம் காண்பதற்கு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. அருகில் உள்ளவர்கள் கொடுத்த தகவலையடுத்து 6 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்க இரண்டு மணி நேரத்துக்கும் மேலானது.

ஆரம்ப கட்ட விசாரணையின்படி மின் கசிவின் காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இருப்பினும், இறுதி விசாரணைக்கு பிறகே உண்மையான காரணம் தெரியவரும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சர்வதேச இளையோர் பாய்மர படகுப் போட்டி: உதயநிதி அதிகாரிகளுடன் ஆலோசனை

சென்னை, டிச.31-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப்போட்டி சாம்பியன்ஷிப் 2026 மற்றும் டிரையத்லான் சென்னை 2026 போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து துணை முதல் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: சர்வதேச இளையோர் பாய்மர படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 போட்டியையொட்டி, சென்னையில் ஜன.6ம் தேதி முதல் 9ம் தேதி வரை பல்வேறு வகையிலான படகுப்போட்டிகள், பாய்மரப் பலகை சறுக்கு போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இப்போட்டிகளில் இந்தியா, அயர்லாந்து, சீசெல்ஸ், மொரீசியஸ், ஈராக்,



ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அல்ஜீரியா, இலங்கை, மலேசியா, தைவான், ஸ்வீடன், ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய 13 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

இதுவரை பாய்மரப் படகுப்போட்டிகளை தொலைக்காட்சிகளில் மட்டுமே பார்த்து ரசித்த சென்னை மக்களுக்கும் இந்திய ரசிகர்களுக்கும் இந்த போட்டி நீங்காத நினைவுகளை அளிக்கும்.

அதேபோல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் டிரையத்லான் சென்னை 2026 போட்டியையொட்டி 1.50 கி.மீ நீச்சல், 40 கி.மீ சைக்கிளிங், 10 கி.மீ ஓட்டம் என மொத்தம் 51.50 கி.மீ தூரம் கொண்ட இரும்பு மனிதன் டிரையத்லான் சென்னை போட்டி ஜன.10 மற்றும் 11ம் தேதிகளில் நடைபெற உள்ளது.இந்தப் போட்டிகளில் 1,200க்கும் மேற்பட்ட இந்திய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்கள் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். இந்த இரண்டு போட்டிகளையும் சிறப்பாக நடத்தும் வகையில் போக்குவரத்து, பாதுகாப்பு, அவசர மருத்துவ சேவைகள், தங்குமிட வசதி, வீரர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் அதுல்ய மிஸ்ரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# புதின் வீடு மீது ட்ரோன் தாக்குதல்? ட்ரம்ப் கோபம்; ஜெலன்ஸ்கி விளக்கம்!

ஃப்ளோரிடா, டிச.31-

புதின் வீடு மீது உக்ரைன் படைகள் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்திக்கு அதிபர் ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஆனால், "இது ரஷ்யாவின் வழக்கமான பொய்" என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.



உக்ரைன் ரஷ்யா போர் மூன்றாண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்தப் போரை நிறுத்துவதில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அதிக அக்கறை காட்டி வருகிறார். இதுவரை பல போர்களை நிறுத்தி விட்டதாக உரிமை கோரும் ட்ரம்ப்புக்கு உக்ரைன் ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வராதது சவாலாகவே இருந்து வருகிறது.இந்நிலையில், புதின் வீடு மீது உக்ரைன் படைகள் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்திக்கு அதிபர் ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் ஃப்ளோரிடாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், "ரஷ்ய அதிபர் புதின் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதை யார் என்னிடம் சொன்னார்கள் தெரியுமா?. புதினே என்னை தொலைபேசியில் அழைத்து இதனைத் தெரிவித்தார். இது நல்லதல்ல. நான் மிகவும் கோபமாக இருக்கிறேன். ணஅதேவேளையில் இந்தச் செய்தி பொய்யாகவும் இருக்கலாம். தாக்குதல் நடக்காமல் இருந்திருக்கவும் வாய்ப்புள்ளது. ஒருவேளை தாக்குதல் உண்மையென்றால். அது நடந்திருக்க இது சரியான தருணம் இல்லை." என்றார்.இந்தத் தாக்குதல் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், "போரை நிறுத்துவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தையில் ரஷ்யா ஈடுபட்டாலும், உக்ரைனின் இந்த தாக்குதல் கடும் கண்டனத்துக்குரியது. இந்த தாக்குதல் முயற்சி அரசு தீவிரவாதம் அன்று வேறென்ன? இதற்காக உக்ரைன் மீது எதிர் தாக்குதல் நடத்துவோம். அதற்கான இலக்குகளை தேர்ந்தெடுத்துவிட்டோம்." என்று தெரிவித்துள்ளார். ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் மேற்கே உள்ள நோவாகோரோட் பகுதியில் புதினின் வீடு உள்ளது. இதைத்தன் உக்ரைன் தொலைதூரம் சென்று தாக்கவல்ல ட்ரோன்களை ஏவி தாக்கியுள்ளதாக ரஷ்யா குற்றஞ்சாட்டுகிறது. புதினின் வீட்டைக் குறிவைத்து 91 ட்ரோன்கள் ஏவப்பட்டதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. ஜெலன்ஸ்கி மறுப்பு: இந்தக் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுக்கும் உக்ரைன் அதிபர் வொலிடிமிர் ஜெலன்ஸ்கி, "அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குழுவின் போர் நிறுத்த முயற்சியைக் குலைக்கவே ரஷ்யா இப்படிச் செய்கிறது.புதின் வீட்டின் மீதான தாக்குதல் என்பது புனைவுக் கதை. போர் நிறுத்தத்தைத் தடுக்கும் ரஷ்யாவின் முயற்சி. இன்னும் சொல்லப்போனால், இது ரஷ்யாவின் வழக்கமான பொய்.ரஷ்யா கீவ் நகர் மீதும், அமைச்சரவை மீதும் ஏற்கெனவே தாக்குதல் நடத்தி உள்ளது. ஆனால், பதில் தாக்குதல் நடத்தினால், போர் நிறுத்த முயற்சி பாதிக்கப்படும் என்று உக்ரைன் எதுவுமே செய்யவில்லை." என்று கூறியுள்ளார்.

# அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நெசவாளர்கள் நிலையை உயர்த்த நடவடிக்கை: பழனிசாமி உறுதி

சென்னை, டிச.31-

அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நெசவாளர்கள் நிலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என பழனிசாமி உறுதி அளித்துள்ளார். அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.அதன்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும் திருவள்ளூர் சட்டப் பேரவை தொகுதிகளில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதில், திருத்தணி சட்டப்பேரவை தொகுதியில், வீரகநல்லூரில் பழனிசாமி பேசியதாவது: நான் எழுச்சி பயணம் மேற்கொண்ட அனைத்து தொகுதிகளிலும் மக்களின் வரவேற்பு அமோகமாக உள்ளது. அதிமுகவின் வெற்றியை மக்களின் எழுச்சியில் பார்க்க முடிகிறது.



அடுத்தாண்டு தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். அதிமுக கூட்டணி 210 இடங்களில் வெல்லும். திமுக ஆட்சியில், அவர்கள் குடும்பம் மட்டும் வளமாகியது. கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி, அடுத்து இன்பநிதி. இந்த வாரிசு அரசியல் தேவையா? திமுக ஆட்சிக்கு வந்த உடன் நீட் தேர்வு ரத்து என்றார்கள். ரகசியம் தெரியும் என்றார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.இப்போது எங்களால் முடியாது என்று சொல்லி விட்டார் முதல்வர் ஸ்டாலின். இதுதான் அந்த ரகசியம். மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று அந்தர்பல்டி அடித்துவிட்டது திமுக. 2021 தேர்தலில், கொடுத்த 525 வாக்குறுதிகளில், நான்கில் ஒரு பங்கை கூட திமுக நிறைவேற்றவில்லை.

திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோயிலில் உள்ளூர் மக்கள் செவ்வாய் கிழமைகளில் வழிபாடு செய்ய சிறப்பு அனுமதி கொடுக்கப்பட்டது. அந்த அனுமதி, திமுக ஆட்சியில் மறுக்கப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் உள்ளூர் மக்கள் செவ்வாய்க்கிழமைகளில் தரிசனம் செய்ய சிறப்பு அனுமதி வழங்கப்படும்.விசைத்தறி, கைத்தறி நெசவாளர் நிலை சரிந்துபோய் இருக்கிறது. நெசவாளர் நிலை மீண்டும் சிறக்க அதிமுக ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வில், அதிமுக அமைப்பு செயலாளரும், முன்னாள் எம்பியுமான கோ. அரி, திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.வி.ரமணா உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.



# குடியரசு தின விழாவில் தமிழக அரசின் அலங்கார வாகனம்; மத்திய அரசு ஒப்புதல்

புதுடில்லி, டிச.31-

குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அலங்கார வாகனம் இடம்பெற மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுடில்லியில் ஜன.26ம் தேதி குடியரசு தின விழா நடைபெறுகிறது. விழாவில் முப்படைகள் அணிவகுப்பு, அலங்கார வாகனங்கள் அணிவகுப்பு இடம்பெறுவது வழக்கம்.இந்த அணிவகுப்பில் பல்வேறு மாநிலங்களின் அலங்கார வாகனங்கள், பல்வேறு துறைகள் மற்றும் துணை ராணுவ அலங்கார வாகனங்கள் பங்குபெறும். இந்தாண்டு அணி வகுப்புக்கான ஏற்பாடுகள் விரைவில் தொடங்க உள்ளது. இம்முறை 10க்கும் மேற்பட்ட மாநிலங்களின் அலங்கார வாகனங்கள் இடம்பெற உள்ளன.இந் நிலையில் 2026ம் ஆண்டு குடியரசு தினவிழாவில் தமிழக அரசின் அலங்கார வாகனம் இடம் பெற மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்து இருக்கிறது. பசுமை மின்சக்தி என்ற தலைப்பில் அலங்கார வாகனம் இடம்பெறும் என்று உள்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# விஜபி தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியல்: ஓர் சிறப்பு அலசல்!

சென்னை, டிச.31-

சட்டசபை தேர்தலையொட்டி தமிழக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகி உள்ளது. பல்லாயிரக்கணக்கான பேர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட நிலையிலும், ஒரே முகவரியில் பல வாக்காளர்கள் பெயர் இடம் பெற்றிருந்தது குழப்பத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது. முதல்வர், அமைச்சர்கள் உள்ளிட்ட விஜபி தொகுதிகளிலும் இதே நிலைமை நீடிக்கிறது. இது குறித்து ஓர் சிறப்பு அலசல்!

கொளத்தூர் தொகுதி (முதல்வர் ஸ்டாலின்)

முதல்வர் ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதி சிறிய தொகுதியாக இருந்தாலும் அங்கு எஸ்.ஐ.ஆர்., பணிகளுக்குப் பின், இறந்தோர், தொகுதி மாறியோர், விடுபட்டவை என ஒரு லட்சத்து 3,812 பேர் நீக்கப்பட்டு உள்ளனர். அதேபோல் ஒரே முகவரி, இரண்டு இடங்களில் ஓட்டு வைத்திருக்கும் நபர்களும் கண்டறியப்பட்டு உள்ளனர்.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி (உதயநிதி)

துணை முதல்வராக உள்ள உதயநிதி ஸ்டாலினின் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் 89 ஆயிரத்து




241 வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டு உள்ளன.மதுரை கிழக்கு தொகுதி (அமைச்சர் மூர்த்தி)

அமைச்சர் மூர்த்தியின் மதுரை கிழக்கு தொகுதி தமிழகத்தில் 2வது பெரிய தொகுதி. 3.70 லட்சம் ஓட்டுகளுக்கு மேல் உள்ளது. இங்கு, ஒரே வீட்டில் 200க்கும் மேற்பட்ட ஓட்டுகள் முறைகேடாக சேர்க்கப்பட்டு உள்ளன. எஸ்ஐஆர் பணியின் போது, 20 ஆயிரம் ஓட்டுக்கள் நீக்கப்பட்டு உள்ளன.போடி தொகுதி (பன்னீர் செல்வம்)

தமிழக முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வத்தின் போடி தொகுதியில், சில பாகங்களில் ஒரே வீட்டு எண்ணில் பல வாக்காளர்கள் வசிப்பதாக வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. உதாரணமாக, முந்தல் ஆதிதிராவிடர் காலனி, 93 பேர், கொட்டக்குடி, குரங்கணியில் 87 பேர், பூதிப்புரம், கோட்டை மேட்டுத்தெருவில் 73 பேர் ஒரே வீட்டில் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 24 ஆயிரத்து 386 பேர் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். எஸ்ஐஆர் பணியில் மொத்தமாக தேனி மாவட்டத்தில், 1.25 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.காட்பாடி தொகுதி (அமைச்சர் துரைமுருகன்)அமைச்சர் துரை முருகனின் வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதியில் 35 ஆயிரத்து 666 பேரின் பெயர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. மொத்தமாக இறந்தோர், இரட்டை இடத்தில் ஓட்டுப்பதிவு உட்பட பல்வேறு காரணங்களால் வேலூர் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 15 ஆயிரத்து 25 வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக்கின்றனர். எடப்பாடி தொகுதிஅதிமுக பொதுச்செயலாளரும், எதிர்கட்சி தலைவருமான இபிஎஸ்சின் சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் 26 ஆயிரத்து 375 வாக்காளர்களின் பெயர்களானது நீக்கப்பட்டு உள்ளது. மொத்தமாக சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளையும் சேர்த்து 3 லட்சத்து 62 ஆயிரத்து 429 பேர் நீக்கப்பட்டு உள்ளனர். ஆலந்தூர் தொகுதி (அமைச்சர் அன்பரசன்)அமைச்சர் தா.மோ.அன்பரசனின் ஆலந்தூர் தொகுதியில் 1 லட்சத்து 32 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளன. அதிக வாக்காளர்கள் நீக்கப்பட்ட 3 தொகுதிகளில் ஆலந்தூரும் ஒன்று ஆகும்.

திருநெல்வேலி தொகுதி (நயினார் நாகேந்திரன்) தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரனின் திருநெல்வேலி தொகுதியில் 42ஆயிரத்து 119 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் 2 லட்சத்து 14 ஆயிரத்து 957 பேர் நீக்கப்பட்டு இருக்கின்றனர். திருவெறும்பூர் தொகுதி (அமைச்சர் மகேஷ்) பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மகேஷ் வெற்றி பெற்ற திருவெறும்பூர் தொகுதியில் 39 ஆயிரத்து 983 வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர்.

திருச்சி மேற்கு தொகுதி (அமைச்சர் நேரு)நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நேருவின் திருச்சி மேற்கு தொகுதியில் 57 ஆயிரத்து 339 வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர்.

# “தமிழக அரசின் பொறுப்பின்மையைக் காட்டுகிறது திருத்தணி சம்பவம்” விஜய் விமர்சனம்



சென்னை, டிச.31-

"இளைஞர்கள் எக்கேடு கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே திருத்தணி சம்பவம் எடுத்துக் காட்டுகிறது" என தவெக தலைவர் விஜய் கடுமையாக விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “சென்னையிலிருந்து திருத்தணி சென்ற ரயிலில் இளைஞர்கள் சிலர், மற்றொரு இளைஞரைக் கொடூரமாகத் தாக்கிய சம்பவம், தமிழகம் எத்தகைய அபாயகரமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறது என்ற அச்சத்தையும் அதிர்வலைகளையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது. இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை அரசு முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கவில்லை. இளைஞர்கள் எக்கேடும் கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு, போதைப் பொருட்களால் இளைஞர்களின் எதிர்காலம் சீரழிந்து வருகிறது. தமிழகத்தில் இளைஞர்களை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்லும் திட்டங்கள் இல்லை. இளைஞர்கள் நல்ல முறையில் கல்வி கற்க, ஏற்ற சூழல் இல்லை. தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகள் இல்லை. புத்தாக்கம் இல்லை. புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் இல்லை. இவை எவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்காமல், யாருக்காக இந்தஆட்சியை நடத்துகிறீர்கள்? எஞ்சியிருக்கக் கூடிய ஆட்சிக் காலத்திலாவது போதைப் பொருட்கள் புழக்கத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கபட நாடக அரசை வலியுறுத்துகிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.



■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், ஆண்டார்கொட்டாரம் ஊராட்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் பசுமை பள்ளித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.




# முதலிபாளையம் நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு. குமரன் சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பூர், டிச.31-

திருப்பூர் மாநகராட்சி கடந்த பத்து வருடங்களாக முதலி பாளையம். நல்லூர் பகுதியில் உள்ள பாறைக்குழியில் சட்ட விரோதமாக பல்வேறு குப்பை கழிவுகளை கொட்டியதால் சுமார் ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவு தண்ணீர் கெட்டு {1.20.050. ஜிஞிஷி.) மண் வளம் கெட்டு உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பை சுகாதார சீர்கேடு ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்தப் பகுதியை இந்தப் பகுதியை மாசு பட்ட பகுதியாக அறிவிக்க மாவட்ட நிர்வாகிகள் இடம் தொடர்ந்து கோரிக்கை வைத்துள்ளோம். இதற்கு செவி சாய்க்காததால் இதனைக் கண்டித்து இன்று திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள குமரன் சிலை முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன. இந்த ஆர்ப்பாட்டத்தில். தினேஷ் தமிழக வெற்றி கழகம். மகேஷ். கே ஏ கிருஷ்ணசாமி நஞ்சராயன் பாதுகாப்புக் குழு. இமயம் சரவணன் சதீஷ் சட்ட விழிப்புணர்வு அணி. கணேஷ் இடுவாய். ஈஸாக். சேக். தமிழ் இனியன். சேதுபதி. நடராஜன் ணிஜ்வி லிகி.. பாயிண்ட் மணி. பி ஜே பி. கொற்றவை சிவா. சீனிவாசன் பிஜேபி. மானூர் சம்பத். காசிம் பாய். மலர்விழி சமூக ஆர்வலர். தொகுப்பாளர் வேலுச்சாமி. முதலிபாளையம் நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு. மற்றும் பொதுமக்கள் சுமார் 300 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்ட பகுதியை மாசுபட்ட. பகுதியை உடனடியாக அறிவித் திடு பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் மருத்துவ பரிசோதனை முகாம். பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் இழப்பீடு வழங்கிடு. பாதிக்கப்பட்ட பகுதியில் சீரமைப்பு நடவடிக்கை தவிர கழிவு மேலாண்மை புதிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளக்கூடாது.

# “மதச்சார்பின்றி செயல்படுகிறேன்” மேற்கு வங்க முதல்வர் மம்தா கருத்து



கொல்கத்தா, டிச.31-

கொல்கத்தாவில் துர்கா தேவிக்காக புதிய கலாச்சார மையம் கட்டப்படுகிறது. இந்த மையத்துக்கு முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் பேசியதாவது: நான் வாக்கு வங்கி அரசியலில் ஈடுபடுவதாக சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இது முற்றிலும் தவறு. நான் மதச்சார்பின்மையை கடைப்பிடிக்கிறேன். அனைத்து மதங்களின் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறேன். கோயில், குருத்வாரா, தேவாலயம் என அனைத்து வழிபாட்டுத் தலங்களும் செல்கிறேன். ஆனால் முஸ்லிம் மதம் சார்ந்த நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்கேற்பதாக சிலர் விமர்சிக்கின்றனர். மதச்சார்பின்மை மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்க தொடர்ந்து பணியாற்றுவேன்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) என்ற பெயரில் மேற்குவங்க மக்கள் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். எஸ்ஐஆர் பணியால் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு அவர் பேசினார்.

# திருத்தணியில் வட மாநில இளைஞர் மீதான தாக்குதலும் நடவடிக்கைகளும் தமிழக அரசு கூறுவது என்ன?



சென்னை, டிச.31-

திருத்தணி சம்பவத்தின் உணர்வுபூர்வ தன்மையை கருத்தில் கொண்டு, தாக்குதல் தொடர்பான வீடியோவை சமூக ஊடக தளங்களில் பரப்ப வேண்டாம். அவ்வாறு பரப்பப்படுவதால் பொது அமைதி மற்றும் ஒழுங்கு பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: டிச.27ஆம் தேதி, திருத்தணி ரயில்வே குடியிருப்பு அருகே, சில நபர்களால் ஒருவர் தாக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது. அதன் பேரில், திருத்தணி காவல் நிலையத்தில், ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபரின் புகாரின் அடிப்படையில் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவருக்கு முறையான உதவியும் அளிக்கப்பட்டது.

மேற்கொண்ட புலன் விசாரணையில், இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் பதிவேற்றம் செய்வதற்கான நோக்கத்துடன், சட்டத்துக்கு முரண்பட்ட 4 இளஞ்சிறாரகள் (Children in Conflict with Law – CICLs) இந்தக் குற்றத்தை செய்திருப்பது தெரியவந்தது. மேற்கண்ட நான்கு CICLகளும் 28.12.2025 அன்று கைப்பற்றப்பட்டனர், இளையர் நீதிக்குழு (Juvenile Justice Board – JJB) முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர்.

அதில், மூன்று CICLக்கள் செங்கல்பட்டில் உள்ள பாதுகாப்பு இல்லத்திற்கு (Place of Safety) அனுப்பப்பட்டுள்ளனர். ஒரு சட்டத்துக்கு முரண்பட்ட இளஞ்சிறாருக்கு இளையர் நீதிக்குழுவால் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட CICLக்கள் மீது சட்டப்படி தகுந்த மற்றும் உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வழக்கின் விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. இந்தச் சம்பவம் தவிர பிற மாநில நபர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் சமீபத்தில் ஏதும் நடைபெறவில்லை. பிற மாநில நபர்கள் இங்கு பாதுகாப்பாகவும் இணக்கமாகவும் வாழ்வதற்கு தகுந்த சூழல் நிலவுகிறதுமற்ற மாநிலங்களைச் சேர்ந்த நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும், அவர்கள் பணியாற்றும் இடங்களிலும் போதுமான காவல் ரோந்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் அடிக்கடி ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு, பிற மாநில தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது. இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் தடுக்கப்படுவதை உறுதி செய்கிறதற்காக கடுமையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இச்சம்பவத்தின் உணர்வுபூர்வ தன்மையை கருத்தில் கொண்டு, தாக்குதல் தொடர்பான இவ்வீடியோவை சமூக ஊடக தளங்களில் பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு பரப்பப்படுவதால் பொது அமைதி மற்றும் ஒழுங்கு பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று அதில் கூறப்ப ட்டுள்ளது.



# “இந்துக்களின் வழிபாட்டு உரிமையை காலில் போட்டு மிதிக்கிறது திமுக அரசு” எல்.முருகன்

மதுரை, டிச.31-

“இந்துக்களின் வழிபாட்டு உரிமையை திமுக அரசு காலில் போட்டு மிதிக்கிறது” என மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றக் கோரி தீக்குளித்து உயிரிழந்த பூர்ணசந்திரன் வீட்டுக்கு மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் இன்று நேரில் சென்று அவரது படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “தர்மத்தை காக்க வேண்டும் என்றால் உயிருடன் இருந்து அதற்காக போராடி தர்மத்தை வெல்ல வேண்டும். பூர்ணசந்திரன் தர்மத்தை காக்க உயிர்த் தியாகம் செய்துள்ளார். முருக பக்தராக இருந்து உயிரை மாய்த்துள்ளார். அவரின் தியாகம் நிச்சயம் ஒருநாள் வெற்றி பெறும். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்றும் வரை அனைவரும் போராட வேண்டும். அதுதான் பூர்ணசந்திரனுக்கு செலுத்தும் மரியாதையாக இருக்கும்.

பூர்ணசந்திரனுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது கார்த்திகை தீபம் ஏற்றுவதுதான் ஒரே வழியாக இருக்கும். பூர்ணசந்திரன் இறப்புக்கு திமுக அரசுதான் காரணம். இதற்கு முதல்வர் ஸ்டாலினும், திமுக அரசும் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும். உயிர்த் தியாகம் செய்த பூர்ணசந்திரன் வீட்டுக்கு திமுகவில் இருந்து ஒருவரும் வரவில்லை. அமைச்சர்களும் வந்து பார்க்கவில்லை.

கடவுளுக்காக உயிரை தியாகம் செய்த பூர்ணசந்திரன் திமுக குடும்பத்தை சார்ந்தவராக இருந்தும் அமைச்சரோ, அரசோ மரியாதை அளிக்காததை அவமரியாதையாக பார்க்கிறோம். அவரது தியாகம் நிச்சயமாக வெல்லும். ஒரு நாள் மலையில் தீபம் ஏற்றப்படும்.

வரும் தேர்தலில திமுகவுக்கு மக்கள் பாடம் புகட்டவார்கள். திருப்பரங்குன்றம் தீப விவகாரத்தை திமுக அரசு ஓட்டுக்காக திசை திருப்பி வருகிறது. திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற வேண்டும் என்பது மக்களின் 50 ஆண்டுக்கு மேலான கோரிக்கையாகும். இதை பக்தர்களின் உணர்வாக அரசு பார்க்க வேண்டும். இதை திமுக அரசு கொச்சைப்படுத்தக்கூடாது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் அனைவருக்கும் வழிபாட்டு உரிமைகளை வழங்கியிருக்கிறது. தீபம் ஏற்ற வேண்டும் என்பது வழிபாட்டு உரிமை. திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது காலம் காலமாக நடந்து வருகிறது. இடைக்காலத்தில் ஓட்டு அரசியலுக்காக அது நிறுத்தப்பட்டது. இதை மீண்டும் தொடங்க வேண்டும் என்பது தான் பக்தர்களின் கோரிக்கை. இந்துக்களின் வழிபாட்டு உரிமைகளை திமுக அரசு காலில் போட்டு மிதிக்கிறது. இதன்மூலம் அரசியலமைப்ப சட்டத்தை திமுக அரசு மதிக்காமல் செயல்படுகிறது” என்று அவர் கூறினார்.

# ஆட்சியில் பங்கு என்ற பேச்சுக்கே இடமில்லை: கூட்டணிக் கட்சிகளிடம் திமுக திட்டவட்டம்

சென்னை, டிச.31-

ஆட்சியில் பங்கு கோரிக்கையை ஏற்க முடியாது, கூட்டணிக்குள் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என காங்கிரஸ் உட்பட தோழமை கட்சிகளிடம் திமுக திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடத்தப்பட உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை திமுக முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.




ஓரணியில் தமிழ்நாடு, உடன்பிறப்பே வா, மண்டல மாநாடுகள் போன்ற தொடர் செயல்பாடுகளை திமுக முன்னெடுத்து வருகிறது. அதேநேரம்

திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ், விசிக உள்ளிட்ட கட்சிகள் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ‘ஆட்சியில் பங்கு’ என்ற கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன.தவெக தலைவர் விஜய், தனது கட்சியின் முதல் மாநாட்டில் பேசியபோது கூட்டணி ஆட்சி என அறிவித்தார். இதன்தொடர்நிகழ்வாக திமுக கூட்டணியில்இந்த விவகாரம் பேசுபொருளானது. எனினும், இதில் திமுக தொடர்ந்து மவுனம் காத்துவந்தது. இந்நிலையில் கூட்டணி ஆட்சி கோரிக்கையை ஏற்க முடியாது என தோழமை கட்சிகளிடம் திமுக தலைமை திட்டவட்டமாக தெரிவித்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.திமுகவைப் பொறுத்தவரை சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் வேளையில், இது கூட்டணிக்குள் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும். வாக்காளர்களிடமும் திமுக தனித்து மெஜாரிட்டி பெறாது என்ற தவறான பிம்பத்தை உருவாக்கிவிடும் என்று அதன் தலைமை கருதுகிறது. இதன் காரணமாக தொகுதிப் பங்கீட்டில் வேண்டுமானால் சில சமரசங்களை செய்கிறோம். ஆனால், அதிகாரப் பங்கீடு கோரிக்கையை கைவிட வேண்டுமென தோழமைக் கட்சிகளிடம் திமுக தலைமை தெரிவித்துவிட்டதாக திமுக தலைமை அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் ஆகியோர் இடையேயான சந்திப்பிலும் திமுகவின் நிலைப்பாட்டை உறுதியாக ஸ்டாலின் கூறிவிட்டதாக கூறப்படுகிறது. அத்துடன், காங்கிரஸ் உட்கட்சி பிரச்னைகளால் தொகுதி ஒதுக்கீட்டிலும் திமுகவுக்கு உள்ள சிரமங்களை ஸ்டாலின் விளக்கியதாகவும் தெரிகிறது.

அதற்கு தேசிய தலைமை திமுகவுடன் தொடர்ந்து பயணிக்கவே விரும்புவதாகவும், திமுக தரப்பில் கூட்டணி பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டால், இத்தகைய தேவையற்ற சலசலப்புகளை தவிர்க்கலாம் என்றும் சிதம்பரம் கூறியதாகவும் பேசப்படுகிறது. திமுகவின் இந்த முடிவால் அதன் கூட்டணியில் பெரிய மாற்றங்கள் ஏற்படாது என்பதே அரசியல் விமர்சகர்கள் கருத்தாக உள்ளது.

# “காதல் திருமணம் பங்குச் சந்தை போன்றது” திருச்சி பெண்ணுக்கு நீதிபதிகள் அறிவுரை



மதுரை, டிச.31-

“காதல் திருமணம் பங்குச் சந்தையை போன்றது, ஏற்றமும் உண்டு, இறக்கமும் உண்டு' என வீட்டை விட்டு வெளியேறி மேற்கு வங்க வாலிபரை மணந்த திருச்சி இளம் பெண்ணுக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அறிவுரை கூறினர். திருச்சியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் சென்னையில் உள்ள பிரபலமான மருத்துவமனைக்கு சொந்தமான மருந்தகத்தில் பணிபுரிந்து வருகிறார். கடந்த மாதம் சென்னையில் இருந்து திருச்சிக்கு வந்த இவர் திடீரென மாயமானதாக கூறப்படுகிறது. இதனிடையே, மகள் மாயமானது தொடர்பாக அவரது பெற்றோர் திருச்சி போலீஸில் புகார் அளித்துள்ளனர். தொடர்ந்து காணாமல் போன மகளை மீட்டு ஆஜர்படுத்தக்கோரி அவரது தந்தை கருப்பண்ணன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்துள்ளார்.இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது மாயமான பெண்ணை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் தள்ளிவைத்தனர். இந்த மனு நீதிபதிகள் வேல்முருகன், ஜோதிராமன் அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இளம் பெண் காணொலி வாயிலாக நீதிபதிகள் முன்னிலையில் ஆஜரானார். நீதிபதிகள் அவரிடம் விசாரணை நடத்தினர். அப்போது அந்தப் பெண், நான் உடன் பணிபுரிந்த மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து அவருடன் வாழ்ந்து வருகிறேன். என்னை யாரும் கடத்திச் செல்லவில்லை என்று கூறியுள்ளார்.பின்னர் நீதிபதிகள், குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் படிக்க வைக்கின்றனர். காதல் திருமணம் என்பது பங்குச் சந்தை போல, ஏற்றமும் உண்டு, இறக்கமும் உண்டு.மனுதாரரின் மகள் விரும்பியவருடன் செல்வது தனிப்பட்ட விருப்பம். அதே நேரத்தில் பெற்றோர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். பெண் நன்றாக படித்துள்ளார். பெற்றோருக்கு தகவல் தெரிவித்திருக்க வேண்டும். உங்கள் பெற்றோர் உங்களை நீதிமன்றத்தில் இப்படி காணொளி வழியாக பார்க்கச் செய்வதா?. காதலை எடுத்துச் சொல்லி பெற்றோரை சமாதானம் செய்திருக்கலாம். பெற்றோர்களும் தற்போதைய காலகட்டத்தை அறிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்” என அறிவுறுத்திய நீதிபதிகள், இளம் பெண்ணிடம் கணவருடன் சென்று பெற்றோரை சமாதானம் செய்யுங்கள் எனவும் அறிவுரை கூறினார். அப்போது பெற்றோர் தரப்பில், “நாங்கள் வயதானவர்கள் எங்களை கவனித்துக் கொள்ள யாரும் இல்லை என்று கூறி கண்ணீர் வடித்தனர். அதற்கு நீதிபதிகள், உங்கள் மகள் உரிய வயதை அடைந்து விட்டார். அவர் திருமணமாகி அவர் கணவருடன் சென்று விட்டார். இதில் நீதிமன்றம் தலையிட முடியாது.” என்று கூறி வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000